# சுவிஸ் தமிழ்க் கத்தோலிக்க ஆன்மிகப் பணியகம் நடாத்தும் மறை அறிவுப் போட்டிகள் - 2025

## பிரிவு 4 (2016 ம் ஆண்டில் பிறந்தவர்கள் வயது 9)

### விவிலிய வினாவிடைப் போட்டி (சரியான விடையைத் தெரிவு செய்தல்)

1. கடவுள் சூரியன், சந்திரன், விண்மீன்களை எத்தனையாம் நாளில் உருவாக்கினார்? **4ம் நாள்**
2. கடவுள் இரண்டாம் நாள் எவற்றைப் படைத்தார்? **விண்ணகம். மண்ணகம், கடல்**
3. விவிலியத்தில் எத்தனை புத்தகங்கள் உள்ளன? **73**
4. ஆதிப்பெற்றோரின் பெயர் என்ன? **ஆதாம், ஏவாள்**
5. ஆதிப்பெற்றோரின் புதல்வர்கள் யாவர்? **காயின், ஆபேல்**
6. ஆபெலைக் கொன்றவர் யார்? **காயின்**
7. கடவுள் நோவாவுடன் ஏற்படுத்திய உடன்படிக்கையின் அடையாளம் எது? **வானவில்**
8. கடவுள் யாரிற்கு இஸ்ராயேல் என்று பெயரிட்டார்? **யாக்கோப்பிற்கு**
9. யாக்கோப்பின் பிள்ளைகளுள் கனவிற்கு விளக்கம் கொடுத்தவர் யார்? **யோசேப்பு**
10. யோசப் தனது சகோதரர்களால் எத்தனை வெள்ளிக்காசிற்கு விற்கப்பட்டார்? **20 வெள்ளிக்காசு**
11. வேதாகமத்தில் முதலாவது புத்தகம் எது? **தொடக்க நூல்**
12. கடவுள் மோயீசனுக்கு முட்செடி நடுவே காட்சி கொடுத்த மலை எது? ஒரேபு
13. கடவுள் மோயீசனுக்கு 10 கட்டளைகளை கொடுத்த மலை எது? **சீனாய் மலை**
14. மோசே திக்குவாயனாக இருந்தபடியால் அவருக்கு பதிலாக பாரவோனிடம் பேசியது யார்? **ஆரோன்**
15. இஸ்ராயேல் மக்களை வழிநடத்திய பெண் நீதித்தலைவர் யார்? **தெபோரா**
16. திருச்சபையின் பிறந்த தினம் எது? **பெந்தக்கோஸ்தே பெருவிழாவன்று**
17. பாவங்களை மன்னிக்கும் அருட்சாதனம் எவை? **திருமுழுக்கு, ஒப்புரவு, நோயில் பூசுதல்**
18. திருப்பலியின் எந்தப்பகுதியில் அப்பம் இயேசுவின் உடலாகவும், இரசம் இயேசுவின் இரத்தமாகவும் மாறுகின்றன? **நற்கருணை வழிபாடு**
19. அருளடையாளங்கள் எத்தனை? **7**
20. திருமுழுக்கில் பயன்படுத்தப்படும் பொருள்கள் யாவை? **நீர், எண்ணெய், மெழுகுதிரி, வெண்ணிற ஆடை**
21. ஒரு முறை மட்டும் பெறும் அருளடையாளங்கள் எவை? **திருமுழுக்கு, உறுதி பூசுதல், குருத்துவம்**
22. «உன் தந்தையையும், தாயையும் மதித்து நட» எத்தனையாவது கட்டளை? **4**
23. இயேசுவின் வளர்ப்புத் தந்தையின் பெயர் என்ன? **புனித யோசேப்பு**
24. «நீரே மெசியா, வாழும் கடவுளின் மகன்» என்று இயேசுவைப் பற்றி அறிக்கையிட்டு கூறியவர் யார்? **புனித பேதுரு**
25. யேசு தோற்றம் மாறும் போது யேசுவோடு இருந்தவர்கள் யாவர்? **பேதுரு, யோவான், யாக்கோபு**
26. இயேசுக்கிறிஸ்துவின் வருகையை முன்னறிவித்த இறைவாக்கினர் யார்? **எசாயா**
27. நல்ல சமாரியனின் உவமையில் விழுந்துகிடந்த, காயமடைந்து கிடந்த நபரின் அருகில் வந்து வீதியின் மறுபக்கமாக உதவி செய்யாமல் சென்ற இரண்டாவது நபர் யார்? **லேவியன்**
28. அருள்மிகு பெற்றவரே வாழ்க ஆண்டவர் உம்மோடு இருக்கிறார் என்று வாழ்த்திய வானதூதர் யார்? **கபிரியேல் தூதர்**
29. யேசு சீடரின் பாதங்களை கழுவிய நிகழ்வு எப்போது நடைபெற்றது ? **பெரிய வியாழன்**
30. பேதுரு இயேசுவை எத்தனை முறை மறுதலித்தார்? **3**

31. இயேசுவுக்கு சிலுவை சுமக்க உதவியவர் யார்? **சீரேன் ஊர் சீமோன்**
32. “நீ யூதரின் அரசனா?” என்று இயேசுவைப் பார்த்து கேட்டவர் யார்? **பிலாத்து**
33. நற்கருணையில் வீற்றிருப்பவர் யார்? **இயேசு**
34. ஆவணி 15ம் திகதி கொண்டாடப்படும் கடன் திருநாள் எது? **மரியன்னையின் விண்ணேற்புத் திருவிழா**
35. நமது திருத்தந்தையின் பெயர் என்ன? **திருத்தந்தை பதினான்காம் லியோ**

**பின்வரும் இறைவார்த்தைகள் பரீட்சையின் போது முன்பின்னாக குழப்பி தரப்படும். அவற்றை வரிசைப்படுத்தி எழுத கற்றுக் கொள்ளுங்கள்**

" நானே வானில் இருந்து இறங்கி வந்த உணவு” (யோவான் 6: 51)

## மனனப்போட்டி (மனப்பாடம் செய்து சமர்ப்பிக்க வேண்டும்.)

என் ஆண்டரே! அளவில்லாத நேசத்திற்குப் பாத்திரமாய் இருக்கிற தேவரீருக்குப் பொருந்தாத பாவங்களை செய்தபடியினாலே முழுமனதுடனே துக்கப்படுகின்றேன். இனிமேல் சுவாமி தேவரீருடைய உதவியினாலே நான் ஒருபோதும் பாவம் செய்யேன் என்றும், பாவங்களுக்கு அடுத்த காரணங்களையெல்லாம் விட்டுவிடுவேன் என்றும் கெட்டி மனதுடனே வாக்குப் பண்ணுகின்றேன்.
எங்கள் நாயகன் இயேசுக்கிறிஸ்து பாடுபட்டடைந்த மட்டில்லாத பேறுபலன்களைப் பார்த்து என் பாவங்களைப் பொறுத்தருளும், என் பாவங்களைப் பொறுத்தருளும், என் பாவங்களையெல்லாம் பொறுத்தருளும் சுவாமி. ஆமென்.

## பாடல் போட்டி (மனப்பாடம் செய்து பாட வேண்டும்.)

தலைவா உனை வணங்க

என் தலைமேல் கரம் குவித்தேன்

வரமே உனைக் கேட்க

நான் சிரமே தாள் பணிந்தேன்

அகல்போல் எரியும் அன்பு அது

பகல் போல் மணம் பரவும்

நிலையாய் உனை நினைத்தால் நான்

மலையாய் உயர்வடைவேன்